சில மருந்துகள் புண்ணுக்குத் தடவும் மருந்துகளாக இருக்கின்றன. இந்திய அரசின் வல்லுநர்கள் ஆராய்ந்து முடிவு செய்திருக்கிற காரணத்தால் இவற்றிற்கு தடை விதிக்கும் உத்தேசம் இல்லை. அவர்கள் குறிப்பிட்டதைப்போல வேறு மருந்துகள் இருந்தால் அவற்றையும் பரிசீலனை செய்யலாம்.*

திருநெல்வேலியில் Ring Road அமைத்தல்.

84—(*வினா எண் 7740) திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி நகரைச் சுற்றி Ring Road அமைக்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி நகரைச் சுற்றி சாலை அமைக்கும் திட்டத்தின் முதல் கட்டமாக பொட்டல்புதூர் சாலை மற்றும் தென்காசி சாலை ஆகிய இரு சாலைகளையும் இணைத்து சாலை அமைக்கும் பணிக்கு தேவைப்படும் நிலத்தை கையகப்படுத்த 20 இலட்சம் ரூபாய் ஏற்பளிக்கப்பட்டிருக்கிறது,

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : பேரவைத் தலைவரர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தென்காசி சாலையையும் பொட்டல்புதூர் சாலையையும், 'ரிங் ரோடு' என்ற முறையில் இணைப்பதுபற்றி அறிவித்ததற்கு மகிழ்ச்சி. அதேநேரத்தில் தென்காசியிலிருந்து திருநெல்வேலி டவுனுக்குள் நுழையும் சாலையானது மிகவும் குறுகலாக இருப்பதால் போக்குவரத்து நெரிசலும் விபத்துகளும் ஏற்படுகின்றன. இதனைக் கருத்திற் கொண்டு, இந்தப் பணி எப்போது தொடங்கப்படும்; எப்போது பணி முடியும் என்ற விவரத்தை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அந்தத் திட்டம் எப்போது முடியும் என்று இப்போது சொல்ல முடியாது. ஏனென்றால் நில ஆர்ஜிதம் செய்வதிலே பல்வேறு சிக்கல்கள் வருகின்றன. எனவே, பணி எப்போது தொடங்கப்படும், எப்போது முடியும் என்று திட்டவட்டமாக இப்போது சொல்ல முடியாது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவிலுக்குச் செல்லும் 'பை பாஸ் ரோடு' போடுவதற்கு மத்திய அரசால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, திருநெல்வேலி நகரின் குறுக்கே சாலை ஒன்று பரீட்சார்த்தமாக அமைக்கப் பட்டது. அது பின்னால் கைவிடப்பட்டது. இருந்தாலும் மாநில

1986 நவம்பர் 19]

அரசு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் என்று தெரிவிக்கப் பட்டது. அது தற்போது எந்த நிலையில் இருக்கிறது என்ற விவரத்தை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி சம்பந்தப்பட்ட பிரச்சினையல்ல இது. இருந்தாலும் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன், திருநெல் வேலிக்கு நான் சென்றிருந்தபோது இது பற்றி விசாரித்தேன். அப்போது பாதியில் நிற்பதாக என்னிடத்திலே சொன்னார்கள். அதற்குத் தேவையான நிலம் கொஞ்சம் இன்னும் கையகப் படுத்தவேண்டிய நிலை இருக்கிறது என்று சொல்லியதாக எனக்கு நினைவு. எனவே அதுபற்றி தனியாக ஆய்வு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : பேரவைத் தலைநாயகர் அவர்களே, இந்த ரிங் ரோடு அமைக்கிறபோது பல்வேறு காரியங்கள் பாதிக்கப்படுகிற சூழ்நிலை தமிழகம் முழுவதும் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் புழல் ஊரில் அண்ணாநகர், பர்மா நகர் போன்ற பகுதிகள் எல்லாம் பாதிக்கப்படுகின்றன. 20 ஆண்டுகளாக இருந்து வருகிற ஊர்களை எல்லாம் காலி செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே ஊர்களே இல்லாத பகுதியாகப் பார்த்து ரிங் ரோடு அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்? முடியவில்லை என்றால், அதை தவிர்க்க நடவடிக்கை எடுக்குமா? (பதில் இல்லை).

தஞ்சை மாவட்டம், சீதக்கமங்கலம்—பம்மல் சாலையில்
திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே பாலம்.

85—(*வினா எண் 7983) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம், சீதக்கமங்கலம் —பம்மல் சாலையில் திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.